LIBRARY
30 MAR 1963
LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, the 2nd March 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at ten of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—OBITUARY REFERENCE TO SRIMATHI M. ANJALAI AMMAL.

MR. SPEAKER : *சென்னை சட்ட சபையில் பழைய காலத்தில் அங்கத்தினராக இருந்த ஸ்ரீமதி எம். அஞ்சலை அம்மாள் அவர்கள் கடலூர் பெண் அங்கத்தினர் தொகுதியிலிருந்து அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து சட்ட சபையில் நன்றாகப் பணியாற்றி, ஜில்லா போர்ட் அங்கத்தினராகவும் இருந்து உப்பு சத்தியாகிரஹம், நீல் சிலை சத்தியாகிரஹம் ஆகியவைகளில் கலந்து கொண்டு தேசத் தொண்டு ஆற்றினார். அந்த அம்மையார் காலமான செய்தியை இந்தச் சபைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். காலஞ்சென்ற அன்னாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் கனம் அங்கத்தினர்கள் எல்லோரையும் ஒரு நிமிஷ நேரம் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.*

(சபை அங்கத்தினர்கள் ஒரு நிமிஷ நேரம் மௌனமாக எழுந்து நின்றார்கள்.)

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Apples

* 500 *Q.*—SRI S. M. ANNAMALAI : *கனம் உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) ஆப்பிள் பழ ஆராய்ச்சி நடத்தும் நிலையம் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Government have sanctioned a scheme for the establishment of a Research Station in Kodaikanal for the improvement of applea produced in the Southern Part of the Country

SRI S. M. ANNAMALAI : *சுமார் எவ்வளவு திட்டத்தில் இந்த ஸ்கீம் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *ஐந்தாண்டு திட்டத்தில் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து மொத்தச் செலவு ரூ. 1,67,440. அதிலே அரசாங்கத்தின் பாகம் ரூ. 1,19,000. ' இந்தியன் கவுன்சில் ஆப் அக்ரிகல்சரல் ரிசர்ச் அதனுடைய பாகம் ரூ. 48,440.*